பக்கம்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

அசல் வழக்கு எண். 292/2023

வா.சா.1 – முருகேசன்

நாள். 10.09.2025.

வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 24.01.2021 அன்று பிரதிவாதிக்கு ரூ.65 லட்சம் ரொக்கமாக கடன் கொடுத்தேன் என்றும் அந்த அசலையும், வட்டியையும் திருப்பி செலுத்தாததால் 01.09.2023 அன்று வட்டியும், அசலும் கேட்டு இந்த தாவாவை நான் தாக்கல் செய்திருக்கிறேன். எனக்கு 86 வயது ஆகிறது என்றும் பிரதிவாதிக்கு 72 வயது ஆகிறது என்றால் சரிதான். எனக்கு ஓரளவுக்கு எழுத படிக்க தெரியும். என் மகன் சக்திவேல் இதே பிரதிவாதிக்கு ரூ.50 லட்சம் ரொக்கமாக கொடுத்து அதன் அசலும், வட்டியும் திருப்பி செலுத்தாததால் இதே நீதிமன்றத்தல் அசல் வழக்கு எண். 298/2023 வழக்கு தாக்கல் செய்து நிலுவையிலிருப்பது எனக்கு தெரியாது. பிரதிவாதி பாலசுப்பிரமணியன் எனக்கு உறவினர் கிடையாது என்றால் சரிதான். ஒவ்வொரு வாய்தாவுக்கும் நான் வந்து வழக்கறிஞர் மூலம் வழக்கு விவரங்களை தெரிந்து கொள்வேன் என்றால் சரிதான்.

பிரதிவாதி நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எதிர் வழக்குரைக்கு நான் மறுப்புரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும் என் மகன் சக்திவேலும் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியான 24.12.2020, 24.01.2021 கால கட்டத்தில் கொரோனா தொற்று நாடு முழுவதும் இருந்தது என்றால் சரிதான். அந்த கால கட்டத்தில் நான் அரசு ஒப்பந்த வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். நான் தாக்கல் செய்துள்ள 292/2023 வழக்கிற்கும், என் மகன் தாக்கல் செய்துள்ள 298/2023 ஆகிய இரண்டு வழக்குகளையும் என் மகன்தான் தாக்கல் செய்து நடத்தி வருகிறார் என்றால் தவறு. நான் என் வழக்கிற்காக வருகிறேன். அவர் அவர் வழக்கிற்காக வருகிறார். நானும் என் மகனும் ஒரே வீட்டில் தரைதளத்தில் நான் குடியிருக்கிறேன். அவர் மேலே குடியிருக்கிறார். ஒரே இடத்தில்தான் விவசாயம் செய்கிறோம். நான் தனியாக விவசாயம் செய்கிறேன்.அவர் தனியாக விவசாயம் செய்கிறார்.

நான் தனியாக விவசாயம் செய்து வருவதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 24.01.2021 பிரதிவாதிக்கு நான் ரூ.65 லட்சம் கொடுக்ககூடிய அளவுக்கு என்னிடம் பணம் இல்லை என்றால்

தவறு. பணம் இல்லாமல் தொழில் செய்ய முடியாது. இப்போது கூட என் வீட்டில் ரொக்கமாக ரூ.50 லட்சம் வைத்திருக்கிறேன். எனக்கு விவசாயம் மற்றும் அரசு ஒப்பந்த வகைகளில் வருமானம் வருகிறது. வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் நான் செய்யவில்லை. நான் அரசு ஒப்பந்ததாரராக வேலை செய்வதற்கு வங்கியில் OD (Over Draft) வாங்கி நான் தொழில் செய்வது கிடையாது. என் தொழில்கள் அனைத்தும் என் சொந்த பணத்தை கொண்டுதான் தொழில் செய்கிறேன். நான் செய்யும் தொழிலுக்கு ஆடிட்டர் மூலமாக முறையாக வருமான வரி கட்டி வருகிறேன் என்றால் ஒப்பந்த தொழிலில் இருந்து வருகின்ற பணத்திற்கு வரிவகையறாக்களை அரசே பிடித்துக் கொண்டுதான் எனக்குரிய தொகையை வழங்குவார்கள். என் வருமானம் சம்மந்தமான ஆண்டு வருமான வரி துறையில் கணக்கு தாக்கல் செய்வதுண்டு என்றால் சரிதான்.

ஆண்டு வருமான வரி தாக்கல் செய்யும் போது கையிருப்புத் தொகையை சொல்வது கிடையாது. எனக்கு IOB வங்கி கணக்கில் மட்டுந்தான் வரவு செலவு வைத்திருக்கிறேன். வேறு வங்கி கணக்கு கிடையாது. பணப்பரிவர்த்தனை செய்யும் போது எனது ஆடிட்டரிடம் கலந்து பேசி செய்வேன் என்றால் தவறு. தேவைப்படும் போது மட்டுமே அவரிடம் பேசுவேன். Online மூலம் பணம் வருவதால் தேவைப்படும் போது மட்டுந்தான் அவரிடம் பேசுவேன். பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையில் 5 வது பாராவில் 2019 - 2020ம் 2020-2021, 2021-2022 ஆகிய ஆண்டுகளுக்குரிய வருமான வரி தாக்கல் செய்த விவரங்களையும், வங்கி கணக்கு பட்டியல்களையும் பிரதிவாதி கேட்டிருக்கிறார் என்றால் சரிதான். அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் கிடையாது. அதே காரணத்திற்காக அந்த நீதிமன்றத்தில் பிரதிவாதி எனக்கு ஒரு மெமோ கொடுத்தார் என்றால் சரிதான். அதன் பின்பும் நான் மேற்படி விவரங்களை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். அவைகள் இந்த வழக்கிற்கு தேவையில்லாத ஆவணங்கள் எனபதால் நான் சமர்ப்பிக்கவில்லை. அதற்குரிய காரணம் என்னவென்றால் நான் என் ஆடிட்டரிடம் கேட்டுதான் சொல்ல முடியும். என் ஆடிட்டர் பெயர் மணி ஆவார். அவர் அலுவலகம் பழனிரோட்டில் சோனா டவருக்கு வடக்கு புறம் அவரது அலுவலகம் உள்ளது. எனது ஆடிட்டரை விசாரித்தார் என் வரவு செலவு விவரங்கள் தெரிய வரும் என்றால் சரிதான். ரூ.2 லட்சத்திற்கு மேல் ரொக்கமாக பணபரிவர்த்தனை செய்ய முடியாது என்றும் அவ்வாறு செய்ய வேண்டும் என்றால் வங்கியின் மூலமாகத்தான் செய்ய முடியும் என்ற விதி உள்ளது எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா வழக்கில் நான் செலுத்தியுள்ள நீதிமன்ற முத்திரை கட்டணமான ரூ.2,55,905/-ரொக்கமாக என் வழக்கறிஞர் மூலம் செலுத்தியிருக்கிறேன் என்றால் சரிதான். 24.01.2021 அன்று பிரதிவாதி என்னிடம் ரூ.65 லட்சம் கடன் கேட்கவில்லை என்றும் நான் அன்றைய தினம் ரூ.65 லட்சம் ரொக்கமாக பிரதிவாதிக்கு கடன் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் தவறு.

புரோநோட்டில் சாட்சி கையெழுத்து செய்துள்ள காளிமுத்து நரிப்பட்டியை சேர்ந்தவர் என்றால் சரிதன். மேற்படி காளிமுத்துதான் என் மகன் தாக்கல் செய்துள்ள வழக்கில் புரோநோட்டில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளாரா என்பது எனக்கு தெரியாது. காளிமுத்துவிக்கு நன்கு எழுத படிக்க தெரியும் என்றும் அவர் ஆவணங்கள் எழுதி கொடுப்பது வழக்கம் என்றும் அவர் புரோநோட்டு எழுதிக் கொடுப்பார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 புரோநோட்டில் மேற்படி காளிமுத்துவின் கையொப்பம் இல்லை என்றும் அவர் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். மேற்படி புரோநோட்டு 24.01.2021 என் வீட்டில் எவைத்து எழுதப்படவில்லை என்றால் எனது வீட்டில் வைத்துதான் எழுதினார். காளிமுத்துவுக்கு பிரதிவாதி பாலசுப்பிரமணியை தெரியுமா, தெரியாதா என்று எனக்கு தெரியாது. ஆனால் காளிமுத்துவை பாலசுப்பிரமணியனுக்கு தெரியும். காளிமுத்து பத்திர அலுவலகத்திற்கு போய் வருவது மற்றும் சாட்சி கையெழுத்து போடுவார் என்றால் தவறு. ஊருக்குள் மட்டும் பத்திரம் எழுதிக் கொடுப்பார்.

புரோநோட்டில் ஸ்டாம்ப் மீது பாலசுப்பிரமணியன் போட்டுள்ள கையொப்பத்திற்கும் அதற்கு கீழே போட்டுள்ள கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. வித்தியாசம் கிடையாது. பாலசுப்பிரமணி புரோநோட்டில் அவர் கையொப்பம் செய்யவில்லை எதிருரையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி கையொப்பத்தை கையழுத்து நிபுணர் ஆய்வு செய்து அறிக்கை பெறுவதற்கு எனக்கு ஆட்சேபணை கிடையாது. நான் பிரதிவாதிக்கு ரூ.ங 65 லட்சம் கொடுக்காத காரணத்தினால் அவரிடம் அசலும், வட்டியும் திருப்பி கேட்டதாகவும் அதை தர மறுத்து விட்டதாகவும் பொய்யான காரணங்களை சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பல நபர்கள் மூலம் பணம் கேட்டதாக நான் சொல்லியிருந்தால் தவறு என்றால் சரியல்ல. நான்கு நபர்கள் மூலம் கேட்டேன். எம்.எல்.ஏ மூலம் கேட்டேன். அந்த 4 நபர்கள் பெயரையும், எம்எல்ஏ பெயரையும் வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் நான் சொல்லவில்லை. உண்மையிலேயே அவ்வாறு கேட்டிருந்தால் அந்த விவரங்களை வழக்குரையில் சொல்லியிருப்பேன் என்றும் நான் வழக்குரையில் சொல்லாததால் அந்த 4 நபர்கள் மூலம் பிரதிவாதியிடம் பணம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மனைவியின் மூலம் பணம் கேட்டேன்.

தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்தேன். அவ்வாறு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றும் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அறிவிப்பு

கொடுத்தற்குரிய அறிவிப்போ, இரசீதோ, தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் நோட்டீஸ் கொடுத்தேன். அவரிடமிருந்து பதில் வந்தது. பிரதிவாதி பாலசுப்பிரமணி 25 வருடமாக ஒட்டன்சத்திரத்தில் பெட்ரோல் பங்க் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நான் பிரமாண வாக்குமூலத்தில் பாலசுப்பிரமணி குடும்ப நண்பர் என சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அதனால் அவர் ஒட்டன்சத்திரம் பாரத ஸ்டேட் வங்கி மூலம் பண பரிவர்த்தனை செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி தன்னுடைய சொத்துக்களை இரண்டு ஒரு நாட்களில் விற்று விட்டு ஊரை விட்டு போவதாக நான் வழக்குரையில் சொல்லவில்லை. பிரதிவாதி ரூ.65 ஆயிரம் வீதம் வட்டி இரண்டு, மூன்று மாதங்கள் செலுத்தவில்லை என்று தெரிந்த உடனே வழக்கு தாக்கல் செய்யாமல் 31 மாதங்கள் கழித்துதான் தாவா வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் பலமுறை போய் கேட்டு அசலும், வட்டியும் கொடுக்காத காரணத்தாலும் கோர்ட்டுக்கு போங்கள் என்று சொன்னதாலும் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN
Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.10 20:51:48 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.